# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# Cr.M.P. No. 5180/2023

**2024**-ம் ஆண்டு **மே மாதம் 03 -ம்** நாள் புகார்தாரர் தரப்பில் சாட்சி **பு..சா.1** -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெகதீஸ்வரன் | வயது | 34 /2024 |
| தகப்பனார் பெயர் | கிருஷ்ணமூர்த்தி | ஜாதி | |
| தொழில் | வசூல் மேலாளர் | மதம் | |
| ஊர் | திருவாரூர் | தாலுக்கா | |

**முதல் விசாரணை** :

இவ்வழக்கில் புகார்தாரர் நிறுவனத்தில் அதிகாரம் பெற்ற முகவர் மற்றும் வசூல் மேலாளர் ஆவேன். வழக்கு விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியும், என்னிடம் காண்பிக்கப்படும் முதல் விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காண்பிக்கப்படும் முதல் விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டதுதான். எதிரி மீது காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எதிரியின் கடன் கணக்கு விபரத்தை தாக்கல் செய்கிறேன். ( **கடன் கணக்கு விபர அறிக்கை பு.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). எதிரி எங்களது நிறுவனத்திற்கு வழங்கிய 22.02.2023 ம் தேதியிட்ட **ரூ.2,10,259/-ற்**கான காசோலை அசலை தாக்கல் செய்கிறேன். ( காசோலை அசல் **பு.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.). 18.-03.2023 ம் தேதியிட்ட வங்கியால் கணக்கு முடிக்கப்பட்டதாக காரணம் காட்டப்பட்டு திருப்பப்பட்ட வங்கி குறிப்பாணை தாக்கல் செய்கிறேன். ( **வங்கி குறிப்பாணை பு.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) இது சம்பந்தமாக **22.03.2023** ம் தேதியன்று தொகை கேட்டு எங்களது நிறுவன வழக்கறிஞர் மூலமாக எதிரிக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினேன். அதன் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன். ( **அறிவிப்பு நகல் பு.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) எதிரிக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டதை காட்டக்கூடிய அஞ்சல் துறை அறிக்கையை தாக்கல் செய்கிறேன். ( **அஞ்சல் துறை அறிக்கை பு.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). எங்களது நிறுவனத்தால் வழங்கப்பட்ட பொது அதிகார ஆவணத்தின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். ( **சிறப்பு அதிகார ஆவணம் உண்மை நகல் பு.சா.ஆ.6 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது**) எதிரி அவரது வங்கி கணக்கில் பணம் இல்லை என்று தெரிந்துக்கொண்டே மோசடியாக எங்களது நிறுவனத்திற்கு காசோலை கொடுத்து ஏமாற்றியதால் அவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். புகார்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

ஒம்/- எல். ரகுபதிராஜா,
நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.